**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.191/2021**

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01–ம் நாள் புதன்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 01.04.2026 | | |
| பெயர்: | தியாகராஜன் (PW1– Cross ) | தகப்பனார் பெயர்: | வேம்பு |
| கிராமம்: | திட்டை | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | முத்திரைத்தாள் விற்பனையாளர் | வயது : | 63/2026 |

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 01.04.2026</u>**

**(ஆரம்பித்த நேரம்– 12.16)**

1. நான் சீர்காழி டவுன் திட்டை ரோட்டில் வசித்து வருகிறேன். நான் M.A., வரலாறு படித்திருக்கிறேன். ஆங்கிலம் படிக்க, எழுத தெரியும். நான் தற்போது தமிழக நியூஸ் என்ற பத்திரிக்கையில் மாவட்ட செய்தியாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் அரசு அனுமதி பெற்ற முத்திரைத்தாள் விற்பனையாளராகவும் பணிபுரிகிறேன். நான் பிரதிவாதி விநாயகா எலக்ட்ரானிக்ஸ் சார்பாக அதன் உரிமையாளர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன். உரிமையாளர் பெயர் குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றால் சரிதான்.

2. பிரதிவாதி எலக்ட்ரானிக்ஸ் என்பது பல கம்பெனிகள் தயாரிக்கும் மின்சாதன பொருட்களை விற்பனை செய்யும் நிலையம் என்றால் சரிதான். அவர் எந்தெந்த கம்பெனிக்கு உரிமம் பெற்ற விற்பனையாளர் என்ற விபரம் எனக்கு தெரியாது. நான் பிரதிவாதி நிறுவனத்தில் வாஷிங்மெஷின் வாங்கும்போது, எந்தெந்த நிறுவனத்தின் வாஷிங்மெஷின்கள் இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் வாஷிங்மெஷினை 18.01.2018 ல் பிரதிவாதியிடமிருந்து

வாங்கினேன்.

3. நான் விருப்பப்பட்டு தான் IFB care நிறுவனத்தின் வாஷிங்மெஷினை எடுத்தேன் என்றால் சரிதான். நான் பிரதிவாதி கடையில் பார்த்தபோது IFB care நான்கு வாஷிங்மெஷின்கள் இருந்தது. மேற்கண்ட நான்கு வாஷிங்மெஷின்களையும் பார்வையிட்டு அதில் சிறந்ததை கடை ஓனர் கூறியதால் அவர் கூறியதை நான் வாங்கினேன். கடை ஓனர் கூறியிருந்தாலும், எனக்கு திருப்தி ஏற்பட்டதால் தான் நான் வாங்கினேன் என்றால் ஓனர் கூறியதன் பேரில் நம்பிக்கை கொண்டதால் வாங்கினேன்.

4. நான் வாஷிங்மெஷினின் தயாரிப்பு எண்ணை என் பிராதில் கூறவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ–2 ஆவணத்தில் விற்பனையாளரின் முகவரி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அதேபோல வா.சா.ஆ–2 ஆவணத்தில் வாஷிங்மெஷினின் தயாரிப்பு எண்ணை குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அதனால் வா.சா.ஆ.2 ஆவணத்தை வைத்து எனக்கு கொடுக்கப்பட்ட வாஷிங்மெஷினுக்கு தான் கொடுக்கப்பட்டது என்று உரிமை கோர இயலாது என்றால் சரியல்ல.

5. நான் வாங்கிய வாஷிங்மெஷினையோ அல்லது அதன் நிழற்படத்தையோ இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கோருகிற பரிகாரம் வா.சா.ஆ.2 ஆவணத்தின் படி என்றால் சரிதான். அப்படி கேட்கும்போது IFB care நிறுவனத்தை இந்த வழக்கில் தரப்பினராக நான் சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேற்கண்ட நிறுவனத்தை சேர்க்காத காரணத்தால் வழக்கானது தள்ளுபடிக்கு அருகதையாக உள்ளது என்றால் சரியல்ல.

6. தாவா வழக்கை இந்நீதிமன்றத்தில் 08.11.2021ல் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். வாஷிங்மெஷின் வாங்கியதிலிருந்து 3 வருடம் 10 மாதம் கழித்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வாஷிங்மெஷின் வாங்கும்போது அதில் ஏதேனும் குறை ஏற்பட்டால் விற்பனையாளரிடம் தெரிவிக்க வேண்டியது கடமை என்றால் சரிதான். குறை

என்பது தயாரிப்பு செய்யும்போது ஏற்படக்கூடியது என்றால் சரிதான். குறை ஏற்பட்டது என்பதை விற்பனையாளரிடம் தெரிவித்ததற்கு ஆதாரம் ஏதேனும் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

7. நான் வாஷிங்மெஷினில் குறை ஏற்பட்டது என்பதை விற்பனையாளரிடம் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. அப்படி தெரிவித்திருந்தால் விற்பனையாளர் தயாரிப்பு நிறுவனத்திடம் கூறி தயாரிப்பு நிறுவனத்தின் சார்பில் அந்த குறையை நிவர்த்தி செய்திருப்பார்கள் என்றாலும், அவ்வாறு நான் தெரிவிக்காததால் தான் குறையை நிவர்த்தி செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் கடந்த 12.12.2019 ல் விற்பனையாளரிடம் வாஷிங்மெஷினில் ஏற்பட்ட குறையை பற்றி கூறினேன். அதிலிருந்து சுமார் ஆறு மாதம் கழித்து தயாரிப்பு நிறுவனத்தின் சார்பில் சரி செய்ய வந்தார்கள். ஆனால், சரி செய்யவில்லை.

8. தயாரிப்பு நிறுவனத்தின் சார்பில் 2 பேர் அடையாள அட்டையுடன் வந்தார்கள். அந்த இருவரின் பெயர், அடையாள அட்டை எண் தெரியாது. வந்த இரு நபர்கள் முதலில் வாரண்டி கார்டை தான் முதலில் பார்ப்பார்கள் ஆனால் நான் அவர்கள் பார்க்கவில்லை என்று கூறுவது தவறு என்றால் சரியல்ல. வந்த இருவர்கள் வாரண்டி கார்டை என்னிடம் கேட்கவில்லை. 2019 க்கு பிறகு எழுத்துமூலமாக பிரதிவாதியிடம் ஏதேனும் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை.

9. 2019 க்கு பிறகு வாஷிங்மெஷின் சரியாக வேலை செய்யவில்லை என்றால் சரிதான். நான் வழக்கறிஞர் அறிவிப்பினை (வா.சா.ஆ.3) கடந்த 13.07.2021ல் தான் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் உண்மையிலேயே வாஷிங்மெஷினில் பழுது ஏற்பட்டிருந்தால் நான் அப்போதே நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. வாஷிங்மெஷினில் எந்த பழுதும் இல்லாத காரணத்தால் தான் நான் புகார் கொடுக்கவில்லை என்றாலும், தயாரிப்பு நிறுவனத்திடமிருந்து நபர்கள் வரவில்லை என்றாலும், அப்படியே வந்திருந்தாலும் வாரண்டி கார்டில் என்ன பழுது ஏற்பட்டிருந்தது என்று

குறிப்பிட்டு இருப்பார்கள் என்றாலும் சரியல்ல.

10. நான் எனது வழக்குரையில் ஏப்ரல் 2021 ல் வாஷிங்மெஷின் பழுது ஏற்பட்டுள்ளது என கூறியுள்ளதும், கம்பெனி ஆட்கள் வந்ததாகவும், ரூ.5,000/- கூலி கேட்டதாகவும் கூறுவது சரியல்ல என்றால் சரியல்ல. வாரண்டி கார்டு என்பது தொழிலாளர் கூலி இல்லாமல் பொருட்களில் ஏற்படும் பழுதை சரிசெய்வது அதனால் தான் கம்பெனியிடமிருந்து எந்த கூலியும் என்னிடம் கேட்கவில்லை என்றாலும் சரியல்ல.

11. நான் பிரதிவாதியின் சேவை குறைபாடு ஏற்பட்ட காரணத்தால் மன உளைச்சலுக்கு ஆளானேன் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால், சேவை குறைபாடு ஏற்பட்டால் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றத்திற்கு தான் வழக்கு தாக்கல் செய்ய வேண்டுமே தவிர, இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலாது என்றால் சரியல்ல. நான் ரூ.1,00,000/- இழப்பீடு கேட்டதற்கு எந்தெந்த வகையில் வேண்டுமென கூறவில்லை என்றால் சரிதான். நான் பழுது ஏற்பட்ட வாஷிங்மெஷினுக்கு பதிலாக வேறு வாஷிங்மெஷின் வேண்டுமென பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான்.

12. நான் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்புக்கு 10.08.2021 ல் வழக்கறிஞர் பதில் அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது வாஷிங்மெஷின் நல்லபடியாக உள்ளது என்றாலும், 3 வருடம் 10 மாதங்கள் நல்லபடியாக வேலை செய்தது என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணமான விற்பனை ரசீதில் வாஷிங்மெஷின் எண் குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றால் சரிதான். அதனால் தான் வாஷிங்மெஷின் போட்டோவை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

13. பிரதிவாதி சேவை குறைபாட்டிற்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி உள்ளூரை சேர்ந்தவர் என்பதாலும், அவரை மிரட்டி பணம் பறிக்க வேண்டும் என்பதாலும், இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எனக்கு மன உளைச்சல் ஏற்பட்டதற்கான எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும்,

நஷ்டஈடு ஏற்பட்டதற்கான எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் கேட்டு இருக்கிற பரிகாரம் இந்நீதிமன்ற ஆளுகைக்கு வராது என்றால் சரியல்ல. அதனால், எனது வழக்கு அதிக செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 13.06)**